புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# பக்தி இலக்கியத்தில் ஆண்டாள்

முனைவர் ச.பத்மா,
M.A.,M.Phil(Tamil).,M.Ed.,M.Phil(Edu).,
M.A(Soci).,Ph.D(Tamil)
உதவிப் பேராசிரியர் தமிழ்த்துறை,
நந்தா கல்வியியல் கல்லூரி, ஈரோடு -52

ஆய்வுச் சுருக்கம்

இவ்வுலகம் தோன்றிய நாள் முதல் மக்களிடையே ஏதோ ஒரு முறையில் பக்தி உணர்வு இருந்து வந்தள்ளது. இந்த பக்தி உணர;வு தோன்றி வளர;ந்து பல்வேறு கொள்கைகளுடன் கூடிய பல்வேறு சமங்களாக விரிந்தன. இங்ஙனம் பல்வேறு பிரிவுகளாக வளர;ந்த சமயம் ஏதோ ஒரு வகையில் மக்களின் உயிரோடும், உடலோடும், வாழ்வியலோடும் பின்னிப் பிணைந்து ஒன்றி நிற்கின்றது. பகலவனையும், கதிர்களையும் வெவ்வேறாக பிரிக்க இயலாததைப் போலவே சமயத்தையும் மக்களையும் தனித்தனியே பிரிக்க இயலாது. எனவே சமயம் என்பது இறைவன் என்றும் கூறலாம். பழம்பெரும் சமயங்கள் சைவமும், வைணவமும் ஆகும். தனது ஆற்றலையும் விஞ்சி செயலாற்றவல்ல ஒரு பொருள் இருக்கிறார் என்ற மனித உணர;வின் விளைவே சமயத்தின் தோற்றமாகும். இதில் பெருமைக்குரியவராக பேசப்படுபவர் பன்னிரு ஆழ்வார்களுள் பெண்பாலராகிய ஆண்டாளுக்கு சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற பெயரும் உண்டு. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்தான் ஆண்டாள். ஆண்டாளுடைய பாடல்களும் சுவைத்ததும்பியப் பாடல்கள் ஆகும். ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வைணவம் புத்துயிர் பெறத் தொடங்கியது. திருமால் அழகிலும் குணத்திலும் ஆழ்ந்து நெஞ்சுறுக ஆழ்வார்கள் பாடினார;கள். அவர்கள் பாடிய 40 ஆயிரம் பாடல்கள் ஆகும். இவ்வாய்விற்கு துணைப்புரிந்தவை ஆண்டாளின் பாடல்கள் அடங்கிய தொகுப்புகளும், அதனைச் சார்ந்த பிற கட்டுரைகளும்.

திறவுச் சொற்கள்

முன்னுரை
சீதை ஆண்டாளின் தோற்றம்
அரங்கன் மீது காதல் கொள்ளும் கோதை
சூடிக்கொடுத்த சுடர் கொடியான ஆண்டாள்
நாச்சியார் திருமொழி
நிறைவாக

## முன்னுரை

பக்தி இலக்கியம் பெருமளவில் தோன்றியது பல்லவர் காலத்தில்தான். வேறு எம் மொழியிலும் தமிழில் தோன்றிய அளவு பக்தி இலக்கியம் தோன்றவில்லை. இவை இருவகைப்பட்டது ஒன்று தனிப்பதிகங்கள் மற்றொன்று பக்தி அனுபவங்களை வெளிப்படுத்துவதல் என்று கூறலாம். இவற்றில் வைணவ இலக்கியங்களில் ,

திருவாய் மொழிக்கு உருகாதார்
ஒரு வாய் மொழிக்கு உருகாதார்

என்ற சிறப்பும் உண்டு. ஆழ்வார் என்ற பெயர் வர காரணம் இவர்கள் பகவான் இடத்தில் ஆழ்ந்த பக்தியைக் கொண்டு இருந்தார்கள் என்பதனால் தான் இலக்கணப்படி வினையால் அணையும் பெயர் வந்தது. இறைவனிடத்தில் ஆழ்ந்த மனம் கொண்டிருந்த காரணத்தால் ஆழ்வார்கள் என்ற பெயர் பெற்றது. வைணவம் இறைவனிடம் நீயே சரணம் என்று அடைக்கலம் கொண்டால்

எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடலாம் என்று கூறுகிறது. வைணவம் இந்திரலோகத்தை ஆளும் பேற்றே விட திருமாலின் இணையடிகளை தொழும் பொழுது உயர்ந்தது என்கிறார் ஆழ்வார்கள் பாசுரங்களை எழுதியும் உள்ளார் அவற்றில்,

பச்சை மலைபோல் மேனிப் பவளவாய் கமல செங்கன்
அச்சுதா அமரர் ஏரே ஆயர்தம் கொழுந்தே என்றும்....!

என்பது தொண்டரடி பொடியாழ்வார் கூற்றாகும்.

வைணவ ஆழ்வார்கள் பன்னிருவரில் ஆண்டாள் ஒருவரே பெண்மணியாவார். இது ஆண்டாளின் பெரும் சிறப்புக்களுள் ஒன்றாகும். ஆண்டாளின் தோற்றம், வரலாறு குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சீதை ஆண்டாளின் தோற்றம்

முன்பு திரேதா யுகத்தில் விநேக நாட்டில் மிதிலை நகரில் ஜனக மன்னன் யாக சாலை அமைப்பதற்காக கலப்பையைக் கொண்டு நிலத்தை உழுகையில் அக்கலப்பையில் ஸ்ரீதேவியின் அம்சமாக ஒரு பெண் தோன்ற அவளை ஜனக மன்னன் தனது மகளாகப் பாவித்து சீதை என்னும் பெயரிட்டு வளர்த்து வந்தான். பின்னர் சீதையை அயோத்தி மன்னனான தசரதனின் மகன் ராமனுக்கு மணம்புரிந்து கொடுத்தான். மனைவியைக் காரணமாகக் கொண்டு பூமியில் தீயோரைக் கொன்று நல்லோரைக் காத்தருளினார். ஸ்ரீதேவி பூமியில் தோன்றி பூமியிலுள்ள மறச் செயல்கள் மறையவும் அறச் செயல்கள் தழைத்து உலகம் உய்யவும் வேண்டி திருமாலின் அவதாரமாகிய இராமனுக்கு இனிய துணைணவியாக விளங்கினாள்.

திருப்பாற்கடலில் பரந்தாமனுக்குப் பணி செய்து கொண்டிருந்த திருமகள் பரமனிடம் பூலோகத்தில் உமக்கு எத்தொண்டு செய்பவர்களிடம் அன்பு அதிகம் என்று வினவினாள். அதற்கு திருமால் தனக்கு பூமாலை மற்றும் பாமாலை சமர்ப்பிப்பவர்களிடமே அன்பு அதிகம் என்று கூறினார். உடனே பூமாதேவி தனக்கும் அப்படி தொண்டு செய்வதற்குப் பிறவி வழங்கும்படி கேட்க பெருமாளும் அதற்கு இசைவு தெரிவித்தார். அதே போல் பூமாதேவி ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளாக அவதரித்தார்.

அரங்கன் மீது காதல் கொள்ளும் கோதை

ஸ்ரீவில்லிபுத்தூர் குடிகொண்டிருக்கும் பரந்தாமனுக்கு நாள்தோறும் புனித மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிவிப்பதைத் தனது வாழ்நாள் கடமையாகக் கொண்டு வாழ்ந்தவர் பட்டர்பிரான் என்றழைக்கப்பட்ட பெரியாழ்வார் ஒருநாள் அவர் பெருமாளுக்கு மாலை சாத்துவதற்காக மாலை கட்டுதற் பொருட்டு ஆலய நந்தவனத்திற்குச் சென்று மலர் கொய்து கொண்டிருந்தபோது துளசிச் செடி அருகினில் பொன் சிலையைப் போன்ற பெண் குழந்தை ஒன்று விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார் அக்காட்சியைக் கண்ட பெரியாழ்வார் மகிழ்ச்சியடைந்து இறைவன் தமக்குக் கொடுத்த வரம் என்று எண்ணி அக்குழந்தையைத் தன் கைகளில் எடுத்து தனது மனைவியாகிய விரஜையிடம் கொடுத்தார் அவரும் அந்தக் குழந்தையைத் திருமாலே தங்களுக்குக் கொடுத்ததாகக் கருதி பக்தியும் காதலும் மிகுந்து குழந்தையை அணைத்துக் கொண்டுகண்ணீரைக் கொட்டிவிட்டார் இதனை மணவாளமாமுனிகள் தனது உபதேச ரத்தின மாலையில்,

இன்றோ திருவாடிப் பு+ரம் எமக்காக
அன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள் குன்றாத...!

என்று பாடி மகிழ்கிறார்

சூடிக்கொடுத்த சுடர்கொடியான ஆண்டாள்

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த 12 வைணவ பெண் ஆழ்வார்கள் ஒருவர் ஆண்டாள். இவர் ஸ்ரீவில்லிப்புத்தூரில் பெரியாழ்வார்ருடைய துளசி தோட்டத்தில் கண்டெடுக்கப்பட்டவர். அவரை கோதை என திருநாமம் இட்டு வளர்த்து வந்தார் வளர்பிறையாக வளர்ந்த கோதை பரந்தாமனின் சரிதங்களை படித்து பித்தாகி அப்பரந்தாமனையே அடைய விரும்பினாள். இதனால் தன் தந்தையார் பரந்தாமனுக்கு என தொடுத்து வைக்கும் மாலையை தந்தைக்குத் தெரியாமல் தானே சூட்டிக் கொண்டு கண்ணாடியில் அழகு பார;த்த பின் பூக்கூடையில் வைத்து விட்டார் இப்படி வழக்கமாக செய்து வந்த செயல் தந்தைக்கு தெரிய அதனால் மனம் வருந்திய

தந்தையின் துயரத்தைப் போக்க அவரின் கனவில் பகவான் தோன்றி கோதை சூடிக்கொடுத்த மாலைகளை நமக்கு மிகவும் விருப்பமானவை எனக் கூற கேட்டு மனம் மகிழ்ந்தார். இதனால் கோதை சூடிக்கொடுத்த நாச்சியார் எனப்பட்டார்.

சூடிக்கொடுத்த சுடர் கொடியாகிய ஆண்டாள் பூ மாலைகளை மட்டுமின்றி பாமலைகளையும் பாடவல்லவராக விளங்கினாள். அவன் மனம் முழுவதிலும் கடல் வண்ணனாகிய கண்ணனே நிறைந்து நின்றான்.

திருமாலை எப்பொழுது திருமணம் செய்து கொள்ளப் போகிறோம் என்பதைக் குறித்தே சிந்தித்தாள் ஆண்டாள். ஒரு நாள் ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்த முதுமையான மகளிரிடம் தான் எப்படித் திருமாலை விரைவாக திருமணம் செய்துகொள்ள முடியும் என்று வினவினாள். அதற்கு அவர்கள் துவாபர யுகத்தில் கோகுலத்தில் கண்ணன் மீது காதல் கொண்ட கோபியர்கள் அவனை அடைவதற்காக காத்யாயின் நோன்பு நோற்று அதன் பயனாய் அவனை அடையப் பெற்ற நிகழ்ச்சியினை ஆண்டாளுக்கு எடுத்துக் கூறினார்கள். அதைக் கேட்ட ஆண்டாள் தானும் பாவை நோன்பு நோற்றுத் திருமாலைத் திருமணம் செய்ய உறுதி பூண்டாள். அவள் கற்பனையில் ஸ்ரீவில்லிபுத்தூரே ஆயர்பாடி ஆனது. அங்குள்ள பெண்கள் அனைவரும் கோபியர் கன்னியர்கள் ஆயினர். வடபெருங் கோயிலே நந்தகோபன் மாளிகை ஆகிவிட்டது. இங்ஙனம் பாவை நோன்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததுதான் திருப்பாவை என்னும் இசைத் தமிழ் பிரபந்தம். முப்பது பாடல்கள் கொண்டது. இது தான் ஆண்டாள் முதலாவதாக அருளிச் செய்த பிரபந்தம் ஆகும். ஆண்டாள் திருமாலை அடைவதற்காக மார்கழி மாதம் முழுவதும் நோன்பை மேற்கொள்ளுகிறாள். கண்ணன் முகம் காட்டாத காரணத்தால் பிரிவுத் துயரில் வருந்திய அவள் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைத் தொகுத்து வெளியிடுவதாக அமைந்துள்ளது நாச்சியார் திருமொழி என்னும் பிரபந்தம். காதல் மிகுதியைப் புலப்படுத்தும் இப்பிரபந்தம் 143 பாடல் கொண்டு அமைந்துள்ளது.

நாச்சியார் திருமொழி

“நீ தொடுக்க மலர் மாலை மலர்களை கடல் வண்ணனை ஆண்டாள் ஆசைப்பட்டால்” என்று எழுதி அக்கடல் மண்ணின் மீது கனைத்தொடுத்திடு. நான்உன் மீது வசை பாடாதிருக்க வேண்டும் என்றால் நீ என்னை வேங்கடவனோடு சேர;த்து வைக்க வேண்டும் என்றால் அவள். மணம்மிக்க ஊமைத்தம்பு முருக்கம்பு கொண்டு மன்மதனை அவள் வணங்குகிறாள்.

‘மாசுடையும் பொடுதலையுலறி
வாய்ப்புறம் வெளுத்து...
-----------------------------------
என்னும் இப்பேறு எனக்கு அருள்
கண்டாய்”.

மன்மதனே நீ பிரிந்தாரை சேர்ப்பவன் அல்லவா உடலை போற்றாது சுழலைத் திருத்தாது வாய்வெளுத்து ஒரு வேளை மட்டும் உண்டு நோற்கிறேன்

‘கற்பூரம் நாறுமோ? கமலப்பு நாறுமோ? திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ? மறுப்போகித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும் விருப்புற்றுக் கேட்கிறேன் சொல்வாழி வெண்சங்கே?” என்று வேண்டுகிறாள்.

கோதையின் திருமணம்

அரங்கநாதனை மனதில் கொண்டு உருகும் ஆண்டாளின் நிலையைக் கண்டு வருந்திய பெரியாழ்வார்,

“எம் பெருமானே என் மகள் பொருட்டு நீ என்ன செய்ய நினைத்திருக்கிறாய்? இவள் ஆற்றாமல் புலம்புவதை நீ அறியாயோ? இன்னும் நீ இரங்காமல் இருப்பது உன் பெருங்கருணைக்கு அழகோ? என்று கூறி புலம்பினார் அன்று இரவு பெரியாழ்வாரின் கனவில் திருமால் தோன்றி உமது திருச்செல்வியைப் பெரிய கோவிலுக்கு அழைத்து வாரும் அவளை நாம் ஏற்றுக் கொள்வோம் என்று அருளிச் செய்தான்”.

இதனால் ஆழ்வார் கவலை மறந்து ஆனந்தக் கூத்தாடினார். பெரியாழ்வாரின் கனவிலே தோன்றி திருமால், திருவரங்கக் கோயில் பரிசனங்கள் கனவிலும் தோன்றி நீங்கள் இசைக்கருவிகள் முழங்க இரத்தினப் பல்லக்குடன் சென்று ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழும் விஷ்ணு சித்தரின் மகளாகிய

*ஆண்டாளை அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டார். அவர்களும் அவ்வாறே சென்று பெரியாழ்வாரைச் சந்தித்து இறைவனது கட்டளையைக் கூறினர் மிகுந்த மகிழ்ச்சியுற்ற ஆழ்வார் தம் மகள் ஆண்டாளுடன் திருவரங்கத்திற்குப் புறப்பட்டார்.*

*ஆண்டாள் புனித நீராடி, புத்தாடை உடுத்தி அழகு பதுமையாக இரத்தினப் பல்லக்கில் ஒரு பக்கம் பெரியாழ்வார் மறுபக்கம் மன்னனும் ஊராரும் புடைசூழ மணப்பெண் ஆண்டாள் பயணம் மேற்கொண்டாள். திருவரங்கம் திருக்கோயிலின் வாசலில் பூரண கும்ப மரியாதையுடன் வாழ்த்தொலி முழங்க திருக்கோயிலுள் நுழைந்தாள். பெரிய பெருமாள் மண்டபத்தை அடைந்ததும் கோதை நாச்சியார் திருவரங்கப் பெருமாளின் திருவழகைக் கண்டு நாணத்தால் முகம் சிவக்க நாயகனைப் பார்த்தாள். பெரிய பெருமானின் பேரழகு ஆண்டாளைக் கவர்ந்தது. அப்போது அவள் உள்ளத்தில் ஆனந்த பேறுணர்வு பெருகி நிறைந்தது. சற்று நேரத்தில் ஆண்டாள் ஒளிப்பிழம்பாக மாறி திருவரங்கன் மார்பில் சென்று இணைந்தாள். இத்தெய்வீகக் காட்சியைக் கண்ட பெரியாழ்வாரும் மன்னன் ஸ்ரீவல்லப பாண்டியனும் ஏனையோரும் அரங்கனையும் ஆண்டாளையும் வாழ்த்தினர்.*

*நிறைவாக*

*ஆழ்வார்கள் வைணவத்தை வளர்த்ததோடு தமிழையும் வளர்த்தார்கள் என்று சொல்ல வேண்டும் சைவர்களுக்கு பெரியபுராணம் என்றால் வைணவர்களுக்கு விஷ்ணு புராணம் சைவர்களுக்கு தேவாரம் என்றால் வைணவர்களுக்கு திவ்ய பிரபந்தம் 4000 திவ்ய பிரபந்தத்தில் ஒவ்வொரு பாட்டிலும் வெளிப்படுவது பகவானின் ஒட்டுமொத்த பிரபாவம் மட்டு மல்ல ஆழ்வார்களின் ஆழ்ந்த பக்தியும் ஐக்கியமும் ஆகும். பன்னிரு ஆழ்வார்களின் ஒருவரான நம்மாழ்வார் உண்ணும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்று என்றிருந்தவர் மானிடவர்கள் இறைவன் பால் மாசற்ற அன்பினை செலுத்தி மனஉறுதியுடன் வழிபட்டால் இறைவனை அடையமுடியும் என்ற உண்மையை தனது வாழ்க்கையின் மூலம் உலகுக்கு உணர்த்தியவர் நமது ஆண்டாள் ஆவர்.*

*துணை நின்ற நூல்கள்*


1. *வைணவம் வளர்த்த பன்னிரு ஆழ்வார்கள் , சி.எஸ்.தேவநாதன் (விஜயா பதிப்பகம்)*
2. *தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ)*
3. *திருப்பாவை.(முனைவர; வீ. சந்திரன்)*
4. *ஆண்டாள் சி.பாலசுப்பிரமணியன்- (கழக வெளியீடு)*


********* ********* ********** ********* ********* ********** ********** **********